(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 93.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, யூன் 07, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0376/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) பால்மா, எரிவாயு, சீனி, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பெற்றோலியம் ஆகிய இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்கவரி மற்றும் ஏனைய சகல விதமான வரிகளையும்;

(ii) கடந்த 10 வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி பொருட்களின் அளவையும்;

(iii) கடந்த 5 வருடங்களாக வரி விதிப்பின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தையும்;

(iv) மேற்படி பொருட்களில் ஏதாவது கடந்த 5 வருடங்களில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் அவற்றின் அளவை வருடாந்த அடிப்படையிலும்;

(v) கடந்த 5 வருடங்களுக்கான மேற்படி பொருட்களின் வருடாந்த நுகர்வையும்

தனித்தனியாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0802/ '10

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் அகுரெஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் அகுரெஸ்ஸ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0880/ '10

3.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்டக் கல்லூரியின் மொத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) விரிவுரைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வேறு வழிகளில் இலங்கை சட்டக் கல்லூரிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) இலங்கை சட்டக் கல்லூரியின் செலவினம் எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் நிதி முகாமைத்துவத்தை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டுக்கான நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவுரைக் கட்டணங்களை அதிகரிக்காது இலங்கை சட்டக் கல்லூரியின் நடவடிக்கைகளைப் பேணிவர முடியாதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1030/ '10

4.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு இறுதியளவில் இலங்கையில் பெருந்தோட்டத்துறையில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

(ii) இப்போஷாக்கின்மை நிலைமைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைகள் பெருந்தோட்டத்துறையில் கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்கின்மையைப் போக்குவதற்கு போதுமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1045/ '10

5\.

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்சிஷினீ பெர்னாந்துபுள்ளே,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் எனப்படும் சதொச தனியார் மயமாக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி அரசாங்கத்தில் சதொச விடயத்திற்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரென்பதையும்;

(iv) சதொசவை தனியார் மயமாக்கியதால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தனியார் மயமாக்கப்பட்டிருந்த சதொச மீண்டும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் யாதென்பதையும்;

(iii) சதொச மீண்டும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காலப்பகுதியில் விடயத்திற்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1164/ '11

6\.

கௌரவ அனுர திஸாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வகுப்புத் தடைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த மாணவர்களின்/மாணவிகளின் பெயர்கள் மற்றும் வகுப்புத் தடை செய்யப்பட்டமைக்கான குற்றச்சாட்டுக்கள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) இவர்களில் முறையான விசாரணை நடத்தப்பட்டு இறுதி முடிவு வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) வகுப்புத் தடைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஏனைய மாணவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0449/ '10

7\.
கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வர்த்தக வங்கிகள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை பற்றியும்;

(ii) தனியார் வங்கிகளில் அரசாங்கம் பங்குகளைக் கொள்வனவு செய்கின்றதா என்பது பற்றியும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இன்றுள்ளவாறாக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ஊ.ந.பொ.நி) அல்லது வேறு ஏதேனும் அரச நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தனியார் வங்கிகளின் பங்குக் கொள்வனவின் மொத்த அளவையும்;

(ii) ஒவ்வொரு வங்கியிலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் சதவீதத்தையும், செலுத்தப்பட்ட மொத்த கிரயத்தை, அத்தகைய கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வெவ்வேறாக ஆண்டுவாரியாகவும்;

(iii) பங்கு விலைகள் வீழ்ச்சியடைந்தால், பங்குக் கொள்வனவில் ஏற்படும் இடர்களை ஏற்பது யார் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0822/ '10

8\.
கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன வலயக் கல்வி காரியாலயத்திற்குட்ட ஹக்மண கோட்டக் கல்வி காரியாலயத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள், விலாசங்கள், மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) இவற்றில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகையை கொண்டுள்ள பாடசாலைகளினதும் ஆசிரியர் பற்றாக்குறையைக் கொண்டுள்ள பாடசாலைகளினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் பெற்றுக்கொடுக்கப்படுவார்களா என்பதையும்;

(iv) அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில்;

(i) மின்சார வசதி இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கையையும்;

(ii) தளபாடத் தேவைகளைக் கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அத்தேவைகளின் தன்மையையும்;

(iii) விஞ்ஞான ஆய்வு கூட மற்றும் நூலக வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கையையும் அவற்றின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நிதியை அப்பாடசாலைகளுக்கு ஒதுக்கித்தர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0904/ '10

9.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகளுக்கான ஆயுதங்களையும் ஏனைய உபகரணங்களையும் கொள்வனவு செய்கின்ற போது நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகின்ற மோசடிகள் சம்பந்தமாக விசாரணைகளை நடத்துவதற்காக உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ திருமதி சிரானி திலகவர்தனவின் தலைமையிலான ஆணைக்குழுவொன்று அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகித்தவர்கள் யாரென்பதையும் ;

(iv) மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கை அதிமேதகு சனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஆணைக்குழுவின் விடயப் பரப்பு யாதென்பதையும்;

(ii) அதில் உள்ளடக்கப்பட்ட கால எல்லை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கையின்படி மோசடிகள் இனங்காணப் பட்டிருப்பின் அவை யாவையென்பதையும்;

(iv) மேற்படி அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) (i) மேற்படி அறிக்கையின் பிரகாரம் மோசடிகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில் அவர்கள் யாரென்பதையும்;

(iii) மேற்படி நபர்களுக்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட ரீதியிலான அல்லது ஒழுக்காற்று ரீதியிலான நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

1032/ '10

10.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு இறுதியளவில் இலங்கையின் வட மாகாணத்தில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

(ii) இப்போஷாக்கின்மை நிலைமைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைகள் வட மாகாணத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்கின்மையைப் போக்குவதற்கு போதுமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1165/ '11

11.

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் வரை அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இக்காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவு சுட்டெண் அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவுக்கு ஒப்பீட்டளவில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0454/ '10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை சனாதிபதி 2010, யூன் 8 முதல் 10 வரையான காலப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த போது, தமிழ் மக்களுக்காக 50,000 வீடுகளைக் கட்டுவதற்கு 24 பில்லியன் ரூபாவினை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணங்கியதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி இற்றைவரையில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையினையும்;

(ii) அவை கட்டப்பட்டுள்ள இடங்களையும் அவற்றைப் பெற்றுக்கொண்டவர் களின் பெயர்களையும்;

(iii) வீடுகளின் நிர்மாணத்திற்கு முன்னதாக வழங்கப்பட்ட இந்தியாவினால் வழங்கப்பட்ட பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) புதிய வீடுகளை வழங்குவதற்காக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படையையும்;

(ii) அவர்கள் தமிழர்களா, முஸ்லிம்களா அல்லது சிங்களவர்களா என்பதையும்;

(iii) உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் குடியமர்த்துவதற்கு இன்னும் தேவைப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கையையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0823/ '10

13.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் முலடியன வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் கம்புறுப்பிட்டிய கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1033/ '10

14.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு இறுதியளவில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

(ii) இப்போஷாக்கின்மை நிலைமைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்கின்மையைப் போக்குவதற்கு போதுமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1166/ '11

15.

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசின் உர மானிய வேலைத்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தின் மொத்த உர விநியோகஸ்தராக கமத்தொழில், கமநலப் பயிர்ச் செய்கையாளர்களின் அமைப்பு செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) அந்த அமைப்பு உர விநியோகத்தை ஆரம்பித்த வருடம் எது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 வரை மேற்கூறிய மொத்த விநியோகஸ்தருக்கு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் உரக் கம்பனியினால் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு உர வகைகளின் அளவு வருடாந்தம் எவ்வளவு;

(ii) 2009 ஆம் ஆண்டளவில் மேற்படி மொத்த விநியோக்ஸ்தரினால் கமநலச் சேவைகள் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு உர வகைகளினதும் அளவு எவ்வளவு

என்பதை அவர் வெவ்வேறாக சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி விநியோகஸ்தருக்கு கிடைத்த உரத்தின் அளவுக்கும் விநியோகிக்கப்பட்ட அளவுக்கும் இடையில் ஒப்பீட்டளவில் கையிருப்புத் தொகையில் பற்றாக்குறை காணப்படின் அது எவ்வளவு;

(ii) ஒரு மெற்றிக் தொன் உரத்தின் சந்தைப் பெறுமதிக்கமைய பற்றாக்குறையாக உள்ள அந்த கையிருப்புத் தொகையின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்கூறிய நிலமைகளினால் அரசுக்கும் விவசாயிகளுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்கூறிய விநியோக்ஸ்த்தர் மோசடி செய்துள்ளாரென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ சாந்த பண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"சுவாபிமானி தஹம் சவியவை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் கீழ், நிதி, திட்டமில் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2011, பெப்புருவரி மாதம் 25 ஆம் திகதிய 1694/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் கீழ், நிதி, திட்டமில் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2011, பெப்புருவரி மாதம் 25 ஆம் திகதிய 1694/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் கீழ், நிதி, திட்டமில் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2011, பெப்புருவரி மாதம் 25 ஆம் திகதிய 1694/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2009 ஆம் ஆண்டின் 13 இலக்க நிதி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின்

2 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமில் அமைச்சரினால் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 17 ஆம் திகதிய 1689/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (3) ஆம் பிரிவு, 14 ஆம் பிரிவு மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2011, ஏப்பிறல் மாதம் 21 ஆம் திகதிய 1702/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.25ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2011.05.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

( 2011 ஏப்பிறல் 21 ஆந் திகதிய 1702/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் 8 (2) ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2008, பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிய 1536/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.25ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சனாதிபதியினால் குறிப்பிட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக நிபுணர்கள் குழாத்துக்கு ஆட்களும் நிறுவனமும் நியமிக்கப்பட்டு ஆக்கப்பட்டு 2010, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதிய 1677/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.25ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

கடற்படை (திருத்தம்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

* 10.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் 5 ஆம் 9 ஆம் மற்றும் 17 ஆம் பிரிவுகளுடன், சேர்த்து வாசிக்கப்படும் 204 ஆம் பிரிவின் கீழ், கைத்தொழில், வாணிப அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2011 சனவரி மாதம் 05 ஆம் திகதிய 1687/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சர்,— விலங்குச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குச் சட்டத்தின் 3, 3அ அ, 11, 26 மற்றும் 34 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 35 ஆம் பிரிவின் கீழ் கால்நடை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009, நவெம்பர் மாதம் 26 ஆம் திகதிய 1629/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.04.05ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 14.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 18.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 19.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.16 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 16

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "விவசாயப் பண்ணைகள் பராமரிப்பு மற்றும் விதைகள் விற்பனை முற்பணக் கணக்கு — விவசாயத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 260,000,000 இலிருந்து ரூபா 300,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 260,000,000 இலிருந்து ரூபா 300,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.17 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 17

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 01602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலஞ்சம் சுற்றிவளைப்பின் போது இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கு எடுக்கும் முற்பணக் கணக்கு - இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 1,500,000 இலிருந்து ரூபா 400,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.18 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 18

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அரசாங்க தொழிற்சாலையின் பண்டகசாலை முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 120,000,000 இலிருந்து ரூபா 105,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 0 இலிருந்து ரூபா 20,000,000 வரை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.19 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 19

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு - இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 1,300,000,000 இலிருந்து ரூபா 1,800,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 4,067,000,000 இலிருந்து ரூபா 4,750,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 500,000,000 இலிருந்து ரூபா 800,000,000 வரை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.20 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 20

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 23202 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "சிறைச்சாலைகள் கைத்தொழில், கமத்தொழில் பொறுப்பேற்புகள் முற்பணக் கணக்குகள் - சிறைச்சாலைகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 153,000,000 இலிருந்து ரூபா 89,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 175,000,000 இலிருந்து ரூபா 98,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.24 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 24

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பிற அரசாங்கத்தின் சார்பில் கொடுப்பனவுக்கான முற்பணக்கணக்கு - அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 5,550,000 இலிருந்து ரூபா 4,700,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.7),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.25 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 25

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பல்லின முற்பணக்கணக்கு - அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 50,000,000 இலிருந்து ரூபா 30,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 250,000,000 இலிருந்து ரூபா 37,200,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 200,000,000 இலிருந்து ரூபா 560,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 26.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.8),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசுரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை (வெளியீட்டு உரிமையை பகிரங்கப்படுத்தல், மொழிபெயர்ப்பு உரிமையை கொள்வனவு செய்தல், மொழிபெயர்ப்புக் கட்டணம் மற்றும் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவு உட்பட) முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 1,900,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 1,000,000,000 வரை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.29 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 27.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 28.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935 )

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

30.

சமனலகிரி சதராங்க (நாடி) வைத்திய சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.